முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்த்துணை நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

04.01.2022, செவ்வாய்கிழமை

1. அன்னதான வள்ளலே தேசிகா
அறமாக வாழுகின்ற அரங்கா
மண்ணுலகை காக்கும் அம்சமாக
மாதவசியாக வந்தநல் குருராசா
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ சிலை திங்கள்
இருபான் திகதி குசன் வாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 20ம் நாள், 04.01.2022 செவ்வாய்கிழமை)
இயம்பிடுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை புகழ்த்துணை நாயனாரும்
அருளுவேன் உலகநலம் பெற
பேசிட ஞானவான் தலைமைகள்
பேருலகம் அடைந்து வருகவே
4. வருகவே வழிகாட்டும் சக்தியாக
வாழும் ஞானி அரங்கன்
தரும பாதைதனை பின்பற்றி
தலைமைகள் வந்தால் மாற்றம்
5. மாற்றம் ஞான ஆட்சியாக
மண்ணுலகம் கண்டு தேறும்
ஆற்றல்பட அரங்கன் கரம்
ஆசிபெற்ற அருளமுது உண்ண
6. உண்ணவே மக்களிடை சக்தி
உயர்சக்தி தயவை கூட்டும்
மேன்மை நிலையாக மாறியே
மேலவர்கள் அருளாசியும் கிட்டும்
7. கிட்டவே கலியிடர் வெல்லும்
குருவருள் பலமும் கூடியே
கட்டமில்லா ஞான வாழ்வும்
கந்தவேலன் அருளும் கூடும்
8. கூடாத வினைகள் விலகும்
குடிபகை பொல்லாப்புகளும்
இடரெனும் கொடுஞ்செயலும்
இனி உலகினில் இருக்கா விலகி
9. விலகியே எங்கும் அமைதி
வேலவன் சக்தி பரவிட
கலகம் களவு களையப்பட்டு
கண்ணியமிக்க நல்லுலகமாக

10. ஆகவே அரங்கன் மார்க்கம்வழி
அகிலமே அடைதல் காணும்
வகைபட வளமும் பலமும்
வளர்ச்சிக்காணும் ஆளுமையாக

11. ஆகவே ஞானத்தலைமையாக
ஆறுமுகன் வழிவழி ஞானிகள்
மிகைபட வந்து ஆளுகின்ற
மண்ணுலகமாக மாற்றம் பெறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–